1984 மார்ச் 5]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் சொல்கின்ற போது, ஒன்றைச் சொன்னார்கள். மாடுகள் அதிகமாக இருந்து, அதனால், சாணம் வைக்கோல் போன்றவைகளால் அடிக்கடி அடைப்புகள் ஏற்படுத்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். எனவே இது சம்பந்தமாக, இந்த மாடுகளை நகரத்தை விட்டு கொஞ்சம் தூரம் தள்ளி வைத்து, நான்கு பக்கங்களிலும், அந்த மாடுகளை வைத்து பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் ஒரு திட்டம் இருந்தது. அந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமானால், நிச்சயமாக மாடுகள் நகரத்தைவிட்டு அகற்றப்படுகின்ற நிலை இருக்குமானால் கழிவுநீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருக்காது. அதோடு கூட, இந்த கழிவு நீர் சம்பந்தமாக—1920-ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இது. அன்றைய ஜனத் தொகைக்குத் தகுந்தபடி அமைக்கப்பட்ட திட்டம். ஆனால் இப்போது பத்து மடங்கு ஜனத் தொகை அதிகரித்திருக்கிறது. ஆகவே, உடனடியாக, முழுமையாக இந்த கழிவுநீர்ப் பிரச்சினையைத் திர்ப்பதற்கு, பழுதடைந்துள்ள அந்தக் குழாய்களை மாற்றுவதற்கு திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கோள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. மாடுகள் எல்லாம் சென்னை நகரத்தைவிட்டு வெளியே போக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார் என்று கருதுகிறேன். அப்படி மாடுகளை நகரத்தை விட்டு வெளியிலே வைத்து, பராமரிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதிமொழியும் கொடுத்து, திட்டத்தைத் தருவார்களானால், அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யலாம்.

கொடைக்கானல் தாலுக்காவிலுள்ள பூலத்தூர், கும்பரையூர் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

169—(*வினா எண். 19408) திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானல் தாலுக்கா பூலத்தூர், கும்பரையூர் ஆகிய ஊர்களில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பண்ணைக்காட்டிலிருந்து இவ்விரண்டு ஊர்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். தற்போதைய குடிநீர் விநியோகம் இவ்விரு கிராமங்களின் முழுத் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

(ஆ) குடிநீர் வடிகால் வாரிய ஆய்வில் உள்ளது.